**செய்தி வெளியீடு எண்:1061** **நாள்: 02.12.2010**

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மற்றும் மருத்துவமனைகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் நேர்காணல் மற்றும் கலந்தாலோசனை செய்து உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது. ஏற்கனவே முப்பது கலந்தாய்வு மற்றும் ஆலோசனை கூட்டங்கள் மூலம் 6810 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள 124 மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 329 நபர்களுக்கு 32வது கலந்தாய்வு கூட்டம் வருகிற 03.12.2010 அன்று சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை பயிற்சி நிலையம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–600 008, என்ற இடத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அன்று மாலையே பணி நியமன ஆணைகள் வழங்கப்படும். நியமன ஆணைகள் பெற்றவர்கள் 15 தினங்களில் பணியில் சேர வேண்டும்.

வேலைவாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பட்டியல் பற்றிய விவரங்களை www.tnhealth.org எனும் இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். பட்டியலில் உள்ளவர்களுக்கு தபால் மூலம் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட உள்ளது. இது குறித்த விவரங்களை மேலே குறிப்பிட்டுள்ள இணைய தளத்திலும் தெரிந்து கொள்ளலாம். மேலும் வேலை வாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ள பட்டியலில் உள்ளவர்கள் மட்டும் கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டுமென இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மற்றவர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள நபர்களுள் அழைப்பு கடிதம் கிடைக்க பெறாதவர்களும் கலந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**